# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 01 புதன்கிழமை 14.06.2024 கதிர் 229



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel




# சாதகமான முன்னேற்றங்கள் உள்ள போதிலும் இலங்கையின் பொருளாதாரம் இன்னமும் ஆபத்தான நிலையிலேயே உள்ளது!

## சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையில் தெரிவிப்பு



கடந்த வரவு செலவு திட்டத்தில் (2023) 43.8 பில்லியன் நிதி ஒதுக்கப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம் குறித்த தகவல்களை வழங்க அரசாங்கம் தவறிவிட்டது என 'வெரிட்டே ரிஸர்ச்' நிறுவனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக சபையின் மூலம் 48 மாதங்கள் விரிவாக்கப்பட்ட கடன் வசதி திட்டத்தின் கீழ் இரண்டாவது மதிப்பாய்வின் கீழ் மூன்றாவது கடன் தவணை வழங்கப்பட்டுள்ளது. இதன்படி சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதியின் கீழ் இலங்கை பெற்றுள்ள மொத்தத் தொகை சுமார் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் என சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை தொடர்பான கடன் திட்டத்தின் கீழ் பொருளாதார கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான ஆதரவை வழங்குவதற்காகவே இந்த கடன் தவணை தொகை வழங்கப்பட்டுள்ளது.

2➤

# அரசமைப்பின் 13 பிளஸ் தொடர்பில் சஜித்துக்குத் தெளிவு இருக்கின்றதா?

## மொட்டுக் கட்சி கேள்வி



அரசமைப்பின் 13 பிளஸ் என்றால் என்ன என்பது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்குத் தெளிவு உள்ளதா என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நிலையில் சஜித் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களிடம் அடிபணிந்துவிட்டார் போலும் என்றும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"புலிகள் அமைப்பால் பொலிஸார் கொலை செய்யப்பட்ட கொடூரமான நாள் நேற்றாகும். அப்போது ஜனாதிபதியாக இருந்த ரணசிங்க பிரேமதாஸவால் எடுக்கப்பட்ட சில தவறான முடிவுகளாலேயே இந்த அநியாயம் ஏற்பட்டது.

அன்ரன் பாலசிங்கம் உள்ளிட்ட புலி உறுப்பினர்களை அன்று கொழும்புக்கு அழைத்து வந்து, பேச்சு நடத்தி ஆயுதங்கள் மற்றும் நிதி என்பன புலிகள் அமைப்புக்கு வழங்கப்பட்டன.

2➤

# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் இலங்கை வருகின்றார் மோடி



இந்தியாவில் மூன்றாவது முறையாகப் பிரதமராகப் பதவியேற்றுள்ள நரேந்திர மோடி எதிர்வரும் ஆகஸ்ட் மாதமளவில் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று ஜனாதிபதியின் ஆலோசகரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆசுமாரசிங்க தெரிவித்தார்.

2➤

### 13 ஆவது திருத்தச் சட்டம் தற்போதுள்ளவாறு அமுலாக்கப்படும்

# அரசியலுக்காகத் தமிழரை நாங்கள் ஏமாற்றவில்லை!

## தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு



"அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் தோல்வி கண்ட பொறிமுறையாக இருந்த போதிலும் மாற்றுத் தீர்வை முன்வைக்காமல் அதனை நீக்க முடியாது. அவ்வாறு நீக்க முற்பட்டால் அது வேறு பிரச்சினைக்கு வழிவகுக்கக்கூடும்." - என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வைத்திய கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அத்துடன், அரசியலுக்காகத் தமிழ் மக்களை ஏமாற்ற வேண்டிய எந்தவொரு தேவைப்பாடும் தேசிய மக்கள் சக்திக்குக் கிடையாது எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் மூலம் கடந்த காலங்களில் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டு வந்துள்ளனர். இவ்வாறு தமிழ் மக்களை ஏமாற்றி அரசியல் நடத்துவதற்கு தேசிய மக்கள் சக்தி தயாரில்லை. எனவே, இந்த நாட்டை மாற்றுவதற்காக அனைத்து இன மக்களையும் அரவணைத்துக்கொண்டு புதியதொரு திசையை நோக்கி நகர வேண்டும்.

13 ஆவது திருத்தச் சட்டம் ஊடாகப் பிரச்சினைகள் தீரவில்லை.

2➤

# இம்முறை பல்கலைக்கழக அனுமதிக்கான கையேட்டை இணையத்தில் மாத்திரமே கொள்வனவு செய்ய முடியும்!

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர்




மாணவர்களின் கல்வி உரிமையை உறுதிப்படுத்தும் நோக்கில் இம்முறை பல்கலைக்கழக அனுமதி கையேட்டை இணையத்தில் மாத்திரம் கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அரச பல்கலைக்கழகங்களில் நிலவும் கல்விசாரா ஊழியர்களின் தாக்கம் காரணமாக இம்முறை மாணவர் கையேட்டை அச்சடித்து விநியோகிக்க முடியாதுள்ளது என தெரிவித்த உப தலைவர் கல்வி உரிமை பற்றி தெளிவாக அறிந்துள்ள எந்தவொரு மாணவரும் அச்சடிக்கப்பட்ட மாணவர் கையேட்டைக் கேட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை குற்றம் சுமத்தமாட்டார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் முதலாம் ஆண்டிலிருந்து கல்விச் செயற்பாடுகள் ஒன் லைன் முறையின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருவதால், மாணவர்களின் கையேட்டை இணையத்திலிருந்து பெறுவதில் மாணவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படாது எனவும் தெரிவித்துள்ளார்.

இதில் ஏதேனும் பிரச்சினைகள் காணப்பட்டால் மானியங்கள் ஆணைக்குழு அல்லது தன்னிடம் தெரிவிக்கும்படி பேராசிரியர் சம்பத் அமரதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (ரென-44)

# தேர்தல் நடக்குமா? என்ற சந்தேகமுள்ளது! நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம்



தேர்தலொன்றை எதிர்பார்த்து இருந்தாலும் அரசாங்கம் தேர்தலொன்றை நடத்துமா? என்ற சந்தேகம் எங்கள் மத்தியில் இருக்கிறது.

நாடாளுமன்றத் தேர்தல் முதலில் இடம்பெறும் என்ற எதிர்பார்ப்பு இருந்தாலும் அதனையும் அரசாங்கம் நடத்துமா? என்று கூறமுடியாது. தோல்வியடைவோம் என்று அறிந்து கொண்டே, தேர்தலை நடத்த தற்போதைய அரசாங்கம் முன்னிலையாகுமா என்பதும் பிரச்சினைக்குரிய விடயமாகும்.

ஆகவே, அரசாங்கத் தரப்பிடமிருந்து உத்தியோக பூர்வ அறிவிப்பு வரும்வரை தேர்தல் இடம்பெறும் என்று உறுதியாக நம்ப முடியாது, என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். (04)

# டிப்பர் மோதி இளைஞர் பலி

திருகோணமலை மாவட்டம், சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேனையூர் - மயிலிமலை கல்லுடைக்கும் பகுதியில் டிப்பர் வாகனம் மோதி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சேனையூர், 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 21 வயதுடைய வி.விதுர்சன் என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார் என்று சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது என்றும் பொலிஸார் கூறினர்.

குறித்த பகுதியில் கருங்கற்களை ஏற்றிச் செல்கின்ற டிப்பர் வாகனமே மோதியுள்ளது என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்ட நிலையில், ஒரு டிப்பர் வாகனம் கைப்பற்றப்பட்ட நிலையில் அதன் சாரதி சந்தேகத்தின் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் தற்போது மூதூர் தள வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான விசாரணையை சம்பூர் பொலிஸார் மேற்கொள்கின்றனர்.

மரணமடைந்தவர் பிறவிக் குறைபாடு உடையவர் என்பதுடன் இறந்தவரின் சகோதரரும் சில வருடங்களுக்கு முன்னர் இவ்வாறான நிலையில் மரணமடைந்தார் என்று சம்பூர் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (05)

# ஜூலை 6 முதல் 22 வரையில் மதுபானசாலைகளுக்குப் பூட்டு!

கதிர்காம ருஹூணு விகாரையின் எசல பெரஹரவை முன்னிட்டு குறித்த பிரதேசத்தில் உள்ள அனைத்து மதுபானசாலைகளையும் மூடுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூலை 6 ஆம் திகதி முதல் ஜூலை 22ஆம் திகதி வரையில் கதிர்காம ருஹூணு விகாரையின் எசல பெரஹர ஆரம்பமாகவுள்ளதால் அக்காலப் பகுதியில் மதுபானசாலைகளை மூடுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

உரிமம் பெற்ற அனைத்து மதுபானசாலைகளையும் இக்காலப்பகுதிக்குள் மூடுமாறு மதுவரி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (04)

# மந்திகையில் கஞ்சா வியாபாரியை மடக்கிப் பிடித்த நெல்லியடி பொலிஸ்

யாழ்ப்பாணம், வடமராட்சி பகுதியில் நீண்ட காலமாக கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் மந்திகையில் வைத்து நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி, கற்கோவளம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றார் என்று பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், மேற்படி இளைஞரை சில நாட்களாகத் தொடர்ந்து கண்காணித்து வந்த நிலையில், நேற்று கஞ்சாவை விற்பனைக்காக மந்திகைக்கு எடுத்துச் சென்றபோது அங்கு வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இளைஞரின் உடைமையில் இருந்து 2 கிலோ 300 கிராம் கஞ்சாவையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேகநபரை நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)

## அரசியலுக்காகத் தமிழரை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது தோல்வி கண்டதொரு பொறிமுறையாகும். நானும் மாகாண சபையில் அங்கம் வகித்துள்ளேன். தீர்வுக்குப் பதிலாக அதன்மூலம் நிர்வாகப் பொறிமுறையில் பிரச்சினைகள் வந்துள்ளன.

13 ஆவது திருத்தச் சட்டம் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட விடயங்கள் நிறைவேறாத போதிலும், அது வெள்ளை யானையாகக் கருதப்பட்டாலும் தற்போது வடக்கு, கிழக்கு மக்கள் 13 என்பது தாம் வென்றெடுத்த உரிமையாகவே கருதுகின்றனர். எனவே, இதற்கு மாற்றுத் தீர்வை வழங்காமல் ஒரேடியாக 13 ஐ நீக்கினால் அது வேறு பிரச்சினைக்கு வழிவகுக்கும்.

13 ஆவது திருத்தச் சட்டம் தற்போதுள்ளவாறு அமுலாக்கப்படும். பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட பின்னர், அதனைக் குறுகிய காலப்பகுதிக்குள் செய்ய முடியும். புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும். அதன்மூலம் அனைத்து இன மக்களினதும் உரிமைகள் உறுதிப்படுத்தப்படும். அனைவரும் சம உரிமை பெற்ற சமூகமாக வாழ முடியும்" - என்றார். (05)

## ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

"இந்தியப் பிரதமரின் பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா சென்றிருந்தார். இந்தியா என்பது எமது பெரிய அண்ணன். எனவே, அந்நாட்டுடன் நெருக்கமான உறவைப் பேண வேண்டியது அவசியம்.

இந்தியப் பிரதமர் விரைவில் இலங்கை வரவுள்ளார். திகதி விவரம் இன்னும் உறுதியாகவில்லை. ஆகஸ்ட் மாதமளவில் வருவார் என எதிர்பார்க்கின்றோம்.

ஏனைய அயல் நாடுகளைவிடவும் இலங்கை தொடர்பில் இந்தியா கூடுதல் கரிசனையைக் கொண்டுள்ளது. ஜனாதிபதி ரணிலுக்கு வழங்கப்பட்ட பிரமாண்ட வரவேற்பும், மோடியின் அணுகுமுறையும் இதற்குச் சான்றாகும்.

இலங்கையின் அடுத்த ஜனாதிபதி ரணில்தான் என்பது இந்தியப் பிரதமர் மோடிக்கும் தெரிந்துள்ளது" - என்றார். (05)

## அரசமைப்பின் 13 பிளஸ் தொடர்பில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர். அப்போதுதான் நிராயுதபாணியாக இருந்த 700 பொலிஸார் கொல்லப்பட்டனர்.

சஜித் பிரேமதாஸ யாழ்ப்பாணத்துக்குச் சென்று, 13 பிளஸ் அமுல்படுத்தப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். 13 பிளஸ் என்றால் என்ன என்பது குறித்து அவருக்குத் தெளிவு உள்ளதா எனத் தெரியவில்லை.

ஜே.ஆர். ஜயவர்தன 13 ஐ கொண்டு வந்திருந்தாலும் 13 ஐ முழுமையாக அமுலாக்கவில்லை. அரச பிரதிநிதியாக ஆளுநர் செயற்பட்டார். அதன்பின்னர் பிரேமதாஸ, சந்திரிகா, டி.பி. விஜேதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் ஜனாதிபதிப் பதவிக்கு வந்திருந்தாலும் 13 ஐ முழுமையாக அமுல்படுத்துவதில் உள்ள பாரதூரத்தன்மையால் அதனைச் செயற்படுத்தவில்லை.

ஆனால், சஜித் பிரேமதாஸ தற்போது 13 பிளஸ் எனக் கூறுகின்றார். மாகாணங்களில் பொலிஸ் கட்டமைப்பு உருவாகினால் என்ன நடக்கும்? சஜித் ஜனாதிபதியாகி அவர் கூறியதைச் செய்தால், அன்று ரணசிங்க பிரேமதாஸ படையினரை நிராயுதபாணியாக்கிய முடிவை விடவும் பயங்கரமானதாக அமையும்.

தேர்தலுக்கு முன்னரே இதைக் கூறியது நல்லம். அப்போது மக்களுக்கு முடிவொன்றை எடுக்க முடியும். பிரேமதாஸ நாட்டுக்கு பல நல்லவிடயங்களை செய்தார். ஆனால், அமைதிப் பேச்சுக்குச் சென்று முழு நாட்டையும் நாசமாக்கினார். இறுதியில் குண்டுத் தாக்குதலில் அவரும் கொல்லப்பட்டார்.

மஹிந்த ராஜபக்ஷவின் புண்ணியத்தால் போர் முடிவுக்குக் கொண்டுவரப்படட்டது. ஆனால், புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் இன்னும் உள்ளன. தமது இலக்கை அடைவதற்கு உலகில் பல நாடுகளில் அவை செயற்படுகின்றன. தேர்தல் நெருங்கும்வேளை அந்த அமைப்புக்களுக்குச் சஜித் அடிபணிந்துவிட்டார் போலும். எனவே, முக்கியத்துவமிக்க - நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கின்ற பிரச்சினைகளின்போது சஜித் சிந்தித்துச் செயற்பட வேண்டும்" - என்றார். (05)

## சாதகமான முன்னேற்றங்கள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஆண்டு (2023) இறுதிக்குள், இந்த கடன் திட்டத்தின் கீழ் முன்னேற்றம் வலுவான மட்டத்தில் இருப்பதாகவும், சமூக செலவினங்களின் சிறிய இலக்குகளைத் தவிர மற்ற ஏனைய அனைத்து நடவடிக்கைகளும் இந்தத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ளன எனவும் சர்வதேச நாணய நிதியம் நேற்று (13) வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான சாதகமான முன்னேற்றங்கள் இருந்த போதிலும், இலங்கையின் பொருளாதாரம் இன்னும் ஆபத்தான நிலையிலேயே உள்ளதுடன், கடன் நிலைத்தன்மையை அடைவதற்கான செயல்முறையும் ஒரு நெருக்கடியான நிலையை எட்டியுள்ளதாக நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரென-43)







உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# தீப்பெட்டி உற்பத்தித் துறையைக் காப்பாற்றுங்கள்! கவனவீர்ப்புப் போராட்டம் - கடிதமும் கையளிப்பு





பிளாஸ்டிக் லைட்டர்களை இறக்குமதி செய்வதைத் தடை செய்யுமாறும், இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் இலங்கை தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கம் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நேற்று நடத்தியிருந்தது. இதன்போது, மத்திய மாகாண ஆளுநருக்கு கடிதம் மூலம் கோரிக்கைகள் கையளிக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பாக அவர்களால் ஆளுநரிடம் கையளிக்கப்பட்ட கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது-

தீப்பெட்டி உற்பத்தியில் அதிக உழைப்பு தேவைப்படுவதுடன், இலங்கை முழுவதும் 25,000க்கும் அதிகமானோருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தொழில் வாய்ப்புகளை இந்தத் துறை வழங்குகிறது.

தற்போது சந்தையில் பிளாஸ்டிக் சிகரெட் லைட்டர்கள் அதிகளவில் உள்ளன. நாங்கள் உலோகத்தால் செய்யப்பட்ட லைட்டர்களுக்கு எதிரானவர்கள் அல்ல. ஆனால், மறுசுழற்சி செய்ய முடியாத பிளாஸ்டிக் லைட்டர்களை மட்டுமே இறக்குமதி செய்து குறைந்த விலைக்கு விற்கிறார்கள்.

இந்த லைட்டர்களில் உற்பத்தியாளரின் பெயர், முகவரி, உற்பத்தி தேதி, காலாவதித் திகதி, தொகுதி எண், குழந்தை எதிர்ப்பு எச்சரிக்கை, அபாயகரமான பொருட்கள் எச்சரிக்கை, இலங்கை தரநிலை அல்லது அவசர எண்கள் எதுவுமே பொறிக்கப்படுவது இல்லை. எனவே, இவை ஆபத்தை ஏற்படுத்தக்கூடியவை. சூழலுக்கும் கேடு தருபவை. எமது துறையைப் பாதிப்பவை.

தீப்பெட்டிகளின் பாதுகாப்பு பெட்டிகள் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் மூலப்பொருளின் பெரும்பகுதி, துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய மேம்பாட்டு வரி (5வீதம்), சமூகப் பாதுகாப்பு வரி (2.5வீதம்) போன்ற வரிகளைச் செலுத்தியே பல்வேறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

இந்த வரிகளுக்கு மேலதிகமாக, மதிப்புக் கூட்டப்பட்ட வரி (18வீதம்), காகிதம், பாரபின் மெழுகு, பெட்டிப் பலகை மற்றும் தீப்பெட்டி இரசாயனங்கள் உள்ளிட்ட எங்களின் மூலப்பொருட்களுக்கும் இந்த வரிகள் பொருந்தும்.

இவற்றினால் எமது தொழில்துறையும் அதனோடு தொடர்புபட்ட 25,000க்கும் மேற்பட்டவர்களும் கடும் நெருக்கடியில் உள்ளோம்.

எனவே, இது குறித்து விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோருகிறோம், என்று குறிப்பிடப்பட்டிருந்தது. (04)

## கற்பிட்டியில் ஹஜ் பெருநாள் கவி அரங்கச் சிறப்பு நிகழ்வு

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பட்டில் எதிர்வரும் ஹஜ் பெருநாளை முன்னிட்டு கற்பிட்டியில் முதன் முறையாக கவி அரங்கம் எனும் சிறப்பு நிகழ்வு ஒன்று 2024 ஜூன் மாதம் 21 ஆம் திகதி கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் பி.பகல் 3 மணிக்கு நடைபெற உள்ளது.

கற்பிட்டி கலை இலக்கியத் துறையை ஊக்குவிக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள தமிழ்க் கலை இலக்கிய மன்றத்தின் கன்னி நிகழ்வாக இடம்பெற உள்ள கவி அரங்க நிகழ்வில், கற்பிட்டியில் இலைமறை காய்களாகக் காணப்படும் மூத்த கவிஞர்கள் மற்றும் இளம் புதுக் கவிஞர்கள் தமது கவித் திறமைகளையும் ஆற்றல்களையும் வெளிப்படுத்த உள்ளனர்.

இந்நிகழ்வில் கலை ஆர்வம் மிக்க சகலரையும் கலந்து கொள்ளுமாறு கற்பிட்டி தமிழ்க் கலை இலக்கிய மன்றத்தின் செயலாளர் சியாஜ் அழைப்பு விடுத்துள்ளார்.




## அல் அஷ்ஹர் பாடசாலையில் புதிய கட்டிடத் திறப்பு விழா



(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

அல் அஷ்ஹர் வித்தியாலயத்திற்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் கிடைக்கப் பெற்ற நிதியிலிருந்து அமைக்கப்பட்ட கட்டிடத்தை திறந்து வைக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் ஏ.அப்துல் ஜப்பார் தலைமையில் நேற்றுமுன்தினம் (12) இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்குப் பிரதம அதீதியாக சம்மாந்துறை வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேந்திரக்குமார் கலந்து கொண்டு கட்டிடத்தைத் திறந்து வைத்ததுடன் பாடசாலையின் வளாகத்தினை மேற்பார்வை செய்து, பாடசாலையில் உள்ள குறை நிறைகளை கேட்டறிந்தும் கொண்டார்.

மேலும் பாடசாலையின் வளாகத்தில் பயன்தரக் கூடிய மரம் நடும் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வும் இடம்பெற்றது. இதன் முதலாவது மரம் வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேந்திரக்குமார் அவர்களின் கரங்களினால் நடப்பட்டது. நிகழ்வினைச் சிறப்பிக்கும் முகமாக வருகை தந்த வலயக் கல்விப் பணிப்பாளரை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

நிகழ்வில் உரை நிகழ்த்திய வலய கல்விப் பணிப்பாளர், "பாடசாலையில் கட்டிடம் என்பது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அத்தியவசியமான ஒன்று. ஆகவே இதனூடாக மாணவர்களின் கல்வியில் சிறந்த பேறுகளை எதிர்பார்க்கிறோம்" என்றும் கூறினார்.

இந்நிகழ்வுக்கு பிரதிக் கல்வி பணிப்பாளர் (நிர்வாகம்) பி.எம்.வை.அரபாத் முகைடீன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) பி.பரமதயாளன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) ஆ.நைரூஸ் கான், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# தமிழ்ப் பொது வேட்பாளராக நான் களமிறங்கவுள்ளேன்

## வடமராட்சியில் வைத்து அனந்தி அறிவிப்பு




ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் செயலாளர் நாயகம் அனந்தி சசிதரன் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராகக் களமிறங்கவுள்ளார் என்று அறிவித்துளார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே தான் தமிழ்ப் பொது வேட்பாளராகக் களமிறங்கும் விடயத்தை அனந்தி தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 45 சிவில் அமைப்புகளின் கூட்டணியான தமிழ் மக்கள் சபையின் தலைமையில் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இம்முறை தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட வேண்டுமென்ற கலந்துரையாடல்கள் கடந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

தமிழ் மக்கள் சபையின் தலைமையில் வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்க் கட்சிகளும் ஒருங்கிணைக்கப்பட்டு ஆழமான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

தமிழ் மக்கள் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ, புளொட், தமிழ்த் தேசியக் கட்சி உட்பட பல்வேறு கட்சிகளும், அமைப்புக்களும் இந்தக் கலந்துரையாடல்களில் கலந்துகொண்டன.

தொடர்ச்சியாக இந்தக் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வரும் பின்புலத்திலேயே அனந்தி சசிதரன் தான் தமிழ்ப் பொது வேட்பாளராகக் களமிறங்கவுள்ளார் என்று அறிவித்துள்ளார்.

எனினும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் அரசியல் பதவிகளில் இருந்தவர்கள் எவரும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்கப்படகூடாதென்ற நிலைப்பாட்டின் பிரகாரமே சிவில் அமைப்புக்களின் கூட்டணியான தமிழ் மக்கள் சபை கலந்துரையாடல்களை நடத்தி வந்தது.

பேராசிரியர் ஒருவரைக் களமிறக்கும் அடிப்படையிலான கலந்துரையாடல்களும் இடம்பெற்றிருந்தன. இவ்வாறு பேச்சுக்கள் தொடரும் சூழலில் அனந்தி சசிதரன், தான் தமிழ்ப் பொது வேட்பாளராகக் களமிறங்கவுள்ளார் என்று எந்தப் பின்புலத்தில் அறிவித்துள்ளார் என்பது தொடர்பில் பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன. (05)

### லிபிய பாலைவனத்தில் சூடான் நாட்டவர் சடலமாகக் கண்டெடுப்பு - ஐ.நா. தகவல்




லிபிய பாலைவனத்தில் சூடான் நாட்டைச் சேர்ந்த ஒருவர் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் அமையம் செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த நபர் ஐரோப்பாவுக்கு செல்வதற்காக குறித்த பாலைவனப் பகுதி ஊடாக முகவர்களினால் நடத்தி அழைத்துச்செல்லப்பட்ட நிலையில், நீராகாரம் இல்லாமல் உயிரிழந்து இருக்கலாம் எனவும், இறந்தவரை முகவர்கள் கைவிட்டுச் சென்று இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடல் வழியாக ஐரோப்பாவை அடைய முயலும் சட்டவிரோதக் குடியேற்றவாசிகளுக்கு லிபியா ஒரு வாயில் கதவாக தோன்றுகிறது, என ஐக்கிய நாடுகள் அமையம் குறிப்பிடுகின்றது. (04)

## விமல் அணியினரின் கூட்டம் 18 ஆம் திகதி நுகேகொடையில்



தெற்கில் அண்மையில் உருவாக்கப்பட்ட சர்வஜன அதிகாரம் எனும் அரசியல் கூட்டணியின் முதலாவது மக்கள் கூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி நுகேகொடையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தின்போது மேலும் சில தேசிய வாத அமைப்புகளும், கட்சிகளும் மேற்படி கூட்டணியுடன் இணையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சர்வஜன அதிகாரத்தின் நிலைப்பாடும் இதன்போது தெளிவுபடுத்தப்படவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, தொழில் அதிபர் திலித் ஜயவீர உள்ளிட்டவர்கள் இந்தக் கூட்டணியில் இடம்பெற்றுள்ளனர். சிங்கள தேசிய வாத அமைப்புகளும் இணைந்துள்ளன.

கோட்டாபய ராஜபக்ஷவின் வியத்கமவில் இருந்த உறுப்பினர்களும் இந்தக் கூட்டணியில் இடம்பெற்றுள்ளனர்.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த பின்னர், மஹிந்தவின் எழுச்சிப் பயணம் நுகேகொடையில் இருந்தே ஆரம்பமானது. மஹிந்த சூறாவளி எனும் தொனிப்பொருளின் கீழ் முதலாவது மக்கள் கூட்டம் மஹிந்த தலைமையில் நுகேகொடையில் இருந்துதான் ஆரம்பமானது என்பது குறிப்பிடத்தக்கது.

## காரைதீவில் வெல்த் கோப் புதிய வங்கிக் கிளை திறப்பு!

(வி.ரி.சகாதேவராஜா)

வெல்த் கோப் வங்கியின் 49 ஆவது கிளை காரைதீவில் நேற்று (13) வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. வங்கியின் முகாமையாளர் செல்வி டெலினா பீட்டர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கலந்து கொண்டார் .

இந்த நிகழ்வில் வெல்த் கோப் வங்கி அமைமைப்பின் தலைவர் தேசமான்ய கீர்த்தி மகோத்தி முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பிக்க, வங்கியின் பிராந்திய முகாமையாளர் தானியாவும் கலந்து கொண்டார்.

21 வருட சேவையைக் கொண்ட இந்த வங்கிக் கட்டமைப்பு அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று, உஹன, சம்மாந்துறை போன்ற பிரதேசங்களில் இயங்கி வந்தது. தற்போது அதன் கிளையொன்று காரைதீவில் ஆரம்பித்து வைக்கப்பட்டு இருக்கின்றது.

காரைதீவின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டார்கள். கூட்டுறவு வங்கி என்ற காரணத்தினால் இங்கு எவ்விதமான வரியும் அறவிடப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை இன்று முதல் ஜூலை 5 வரை அனுப்பிவைக்க வாய்ப்பு

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை அனுப்புவதற்கு இன்று (14) முதல் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக அனுமதிக்கான மாணவர் கையேடு தற்போது வெளியிடப்பட்டுள்ளதாகவும் மாணவர்கள் விண்ணப்பிப்பதற்கு ஜூலை 5 ஆம் திகதி வரை மூன்று வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். விண்ணப்பங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையதளத்தினூடாக சமர்பிக்குமாறும், அவ்வாறு பூர்த்தி செய்து அனுப்பப்படும் விண்ணப்பத்தை பிரதியெடுத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு தபால் மூலம் அனுப்புமாறும் ஆணைக்குழுவின் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பான விபரங்களை 0112695301 அல்லது 0112695302 எனும் தொலைபேசி இலக்கங்களினூடே அறியலாம் எனவும் கூறப்பட்டுள்ளது. (ரென-45)

# அட்டாளைச்சேனை பிரதேசத்தில் பிறப்புப்பதிவு இல்லாதவர்களுக்கு ஆவணம் வழங்கி வைப்பு

(நவாஸ்)

பிறப்புப் பதிவு இல்லாததனால் தமது அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் இருந்த அஸ்வெசும பயனாளருக்கு அட்டாளைச்சேனை பிரதேச செயலாளரின் வழிகாட்டலில் மேலதிக மாவட்ட பதிவாளரின் சிபாரிசின் பேரில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட உதவிப் பதிவாளர் நாயகத்தின் அனுமதியுடன் இன்று பிறப்புச் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டது.

பிரதேச செயலாளர் பிரிஎம். இர்பான், மேலதிக மாவட்ட பதிவாளர் எம்எஸ்எம்.உவைஸ் மற்றும் முகா மைத்துவ சேவை உதியோகத்தர் ஏஎல்எம்.றனீஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# பிரதிப் பிரதம செயலாளராக பதவி உயர்வு பெற்ற அஸ்மிக்கு கல்முனை மாநகர சபையில் கௌரவிப்பு



(அஸ்லம் எஸ்.மௌலானா)

கிழக்கு மாகாண சபையின் பிரதிப் பிரதம செயலாளராக (ஆளணி மற்றும் பயிற்சி) பதவி உயர்வு பெற்றுள்ள கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மியை கௌரவித்து, வாழ்த்தி மகிழ்வுறும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை (13) கல்முனை மாநகர சபையில் நடைபெற்றது.

கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி, நிதி உதவியாளர் யூ.எம். இஸ்ஹாக், சிரேஷ்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் முபீனா சம்சுல் அமான் ஆகியோர் வாழ்த்துரைகளை நிகழ்த்தினர்.

இதன்போது ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி, கல்முனை மாநகர சபை சமூகம் சார்பில் மாலைகள் அணிவித்து, பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மாநகர சபையின் சிரேஷ்ட வருமானப் பரிசோதகர் ஏ.ஜே.சமீம் நிகழ்வை நெறிப்படுத்தியிருந்தார்.

இந்நிகழ்வில் மாநகர சபையின் உள்ளூராட்சி உத்தியோகத்தர் தாரிக் அலி சர்ஜுன், வேலைகள் அத்தியட்சகர் பி.ரி.எம். நஹீம் உட்பட பிரிவுத் தலைவர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களும் பங்கேற்றிருந்தனர்.

# மனைப் பொருளாதாரத்தினை ஊக்குவிக்கும் வேலைத்திட்டம்



(எம்.ஏ.றமீஸ்)

தேசிய உணவு உற்பத்தி ஊக்குவிப்பு மற்றும் மனைப் பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டத் தின் கீழ், வீடுகளில் மனைப் பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்பும் வகையில் விவசாயத் திணைக்களத் தின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் நாடு தழுவிய ரீதியில் உள்ள கிராம மட்டங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக, ஒலுவில் நுஜா மகளிர் விவசாய விரிவாக்கல் அமைப்பின் மூலம் மனைப் பொருளா தாரத்தினைக் கட்டியெழுப்பும் 'கை வினைப் பொருட் கள் தயாரிக்கும் விசேட பயிற்சிகள்' ஒலுவில் பிரதே சத்தில் நேற்று முன்தினம் (12) இடம்பெற்றன.

அமைப்பின் தலைவி ஏ.எல்.நயிமா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது அம்பாறை விவசாய விரிவாக்கல் பயிற்சிப் பிரிவின் வளவாளர் எஸ்.ஜீவிதா பிரதம வளவாளராகக் கலந்து கொண்டு இல்லத் தலைவிகளுக்கும் யுவதிகளுக்குமான பயிற்சிகளை வழங்கி வைத்தார்.

அம்பாறை மாவட்ட விவசாய பிரதிப் பணிப்பாளர் கே.ஏ.கே.எஸ்.லக்மால் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இந்நிகழ்வின்போது தலைமை விவசாய போதனாசிரியர் ஆர்.விஜயராகவன், விவசாய தொழிநுட்ப உத்தியோகத்தர் பி.நிரோசன் உள்ளிட்ட துறைசார்ந்த முக்கியஸ்தர்களும் பங்கு கொண்டனர்.

இவ்வேலைத் திட்டத்தின் கீழ் வீடுகளில் இலகுவில்கிடைக்கும்பொருட்களைக்கொண்டு காலத்திற்கு ஏற்ற வகையில் அனைவரும் விரும்பி உண்ணும் உணவுப் பண்டங்களை குறைந்த செலவில் சுகா தார முறையில் உற்பத்தி செய்யும்பயிற்சிகள் பல வழங்கப்பட்டன.

வீடுகளில் இருந்தவாறு போஷாக்கான உணவு உற்பத்தியினை மேற்கொள்வதோடு, வாழ்க்கைச் செலவினைக் குறைத்து, நச்சுப் பொருளற்ற சுற்றாடல் நேயம் மிக்க உணவு உற்பத்தியின் பால் மக்களை வழிப்படுத்தும் இச்செயற்றிட்டத்தில் ஒலுவில் பிர தேச மக்கள் மிகுந்த உற்சாகத்துடன் ஆர்வம் காட்டி வருகின்றனர்.



# திருகோணமலை ஆதியம்மன்கேணி பாடசாலைக்கு கற்றல் உபகரணங்கள்



(காரைதீவு சகா)

இணைந்த கரங்கள் உறவுகளின் நிதிப் பங்களிப்பில் திருகோணமலை மூதூர் கல்வி வலயத்தில் உள்ள ஆதியம்மன் கேணி வித்தியாலய பாடசாலை மாணவர்களில் 50 வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பைகள் வழங்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர். மா.வர்ணகுலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

"ஏழ்மையை ஒழிப்போம் கல்வியை விதைப்போம்" எனும் தொனிப்பொருளில் இணைந்த கரங்கள் அமைப்பானது கற்றல் உபகரணங்களை பல கஷ்டப் பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு கடந்த இரண்டு வருடங்களாக வழங்கிவருகிறது. அவர்களது உதவித் திட்டத்தில் பயன்பெறும் 138 ஆவது பாடசாலை இதுவாகும்.

இந்நிகழ்வில் இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்களான சி.காந்தன், லோ. கஜரூபன், எஸ்.சுரேஸ், மா.ஜெகனாதன் ஆகியோர் கலந்து கொண்டு 50 மாணவர்களுக்கு பாடசாலைக்கு செல்வதற்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பைகள் என்பனவற்றை வழங்கினர்.

# நிப்பொன் பெயிண்ட் நிறுவனத்தின் Asia Young Designer Awards அறிமுகமும் மாணவருக்கான வழிகாட்டல் நிகழ்வும்







நிப்பொன் பெயிண்ட் நிறுவனத்தின் AYDA (Asia Young Designer Awards) 2024-2025 அறிமுகம் மற்றும் தொழிநுட்பப் பட்டறையுடன் City school of Architecture (CSA) இல் அடுத்த தலைமுறை கட்டிடக் கலைஞர்களுக்கான வழிகாட்டல் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

எதிர்கால வெற்றிக்குத் தேவையான திறன்கள் மற்றும் அறிவுடன் மாணவர்களை ஆயத்தப்படுத்துவதற்காக தொழில் மற்றும் கல்வியை இணைப்பதற்கான நோக்கில் நிப்பொன் பெயிண்ட் நிறுவனத்தினால் இத்தகைய வழிகாட்டல் நிகழ்வுகள் நடாத்தப்பட்டு வருகின்றன.






## விற்பனை நிலையங்களில் திடீர்ப் பரிசோதனைகள்!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் சகீலா இஸ்ஸதீனின் ஆலோசனையிலும், சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.ஐ.எம்.கபீரின் வழிகாட்டலிலும், வியாபார நிலையப் பரிசோதனைச் சுற்றிவளைப்பு நடவடிக்கை வளத்தாப்பிட்டி, மல்வத்தை போன்ற பகுதிகளில் நடைபெற்றது.

இரண்டு ஹோட்டல்களில் தொழில் புரிபவர்களுக்கு மருத்துவச் சான்றிதழ் இன்மை காரணமாக தலா 10,000 ரூபா வீதமும், நான்கு சில்லறைக் கடைகளில் காலாவதியான உணவுப்பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்தமைக்காக 5000 ரூபா வீதமும், மரக்கறி விற்பனையாளர் ஒருவர் தூய்மையற்ற நிலத்தில் அவற்றை இட்டு விற்பனை செய்தமைக்காக 5000 ரூபா தண்டமும் அறவிட சம்மாந்துறை நீதவான் நீதிமன்றினால் தீர்ப்பளிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

## அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரோடு தொழிற்சங்கம் சந்திப்பு

(சர்ஜூன் லாபீர்)

அம்பாறை மாவட்ட புதிய மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜெயராஜனுக்கும், அம்பாறை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கத்திற்கும் இடையிலான சிநேகபூர்வ சந்திப்பு நேற்று (13) அம்பாறை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கத் தலைவர் கபீர் கலீல் தலைமையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் அமைப்பின் செயலாளர் எம்.அரூஸ், இஹ்லாஸ் மாவட்ட இணைப்பாளர் எல்.எம் சர்ஜூன், பிரதேச இணைப்பாளர் ஏ.சி பர்ஹான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் மாவட்டத்தில் அமுல்படுத்தப்படவிருக்கும் எதிர்கால அரச திட்டங்களில், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வகிபாகம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் சவால்கள் போன்ற பல்வேறு விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.06.2024 இல் வெளியிடப்பெற்றது.